17th July 1964]

திரு. மீ. கலியாணசுந்தரம் : மேஜை மீது வைத்திருக்கக்கூடிய அறிக்கையைப் பார்த்தால் நமது கனம் உள் துறை அமைச்சர் திரு. கக்கன் உபயோகப்படுத்தக்கூடிய கார் மாத்திரம் அதிகப் பழுது அடையாமல் ஓடிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. மற்றவர்களுக்குக் கொடுத்திருக்கக்கூடிய கார்கள் ஓட்டை உடை சலானவையா? மற்ற மந்திரிகளுக்கும் இந்த மாதிரியாக நல்ல கார்களைக் கொடுக்கவில்லையா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : என் கார் கூட அதிக ரிப்பேர் ஆனதாகத் தெரியவில்லை. இதை நான் இப்பொழுது தான் பார்க்கிறேன். ஒரு முறை தான் 440.22 ரூபாய் செல வாயிற்று. அப்புறம் சிலவாகவில்லை. பொதுவாக, மைனர் ரிப்பேராக இருந்தாலும் அவை அலட்சியம் செய்யப்படாமல் உடனடியாகக் கவனிக்கப்படுவதன் மூலமாகத்தான் கார்கள் நீண்டகால சர்விஸ் செய்யும். ஆகையால் கார் ரிப்பேர் செலவு அனாவசியமென்று நினைக்கக்கூடாது ?

திரு. மீ. கலியாணசுந்தரம் : அமைச்சர் அவர்களுடைய கார்கள் எந்தப் பட்டறையில் பழுது பார்க்கப்படுகின்றன? அரசாங்கத் திற்குச் சொந்தமான ஸ்டேட் டிரான்ஸ் போர்ட் பட்டறையிலா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எல்லாக் கார்களும் அங்கேயே பழுது பார்க்கப்படுவதாகச் சொல்ல முடியாது. கார்கள் எந்த எந்த மேக் என்று பார்க்க வேண்டும். அம்பாஸிடராக இருந்தால் பழுது பார்ப்பார்கள். எந்த எந்த மேக் கார்களை எந்த எந்த இடத்தில் பழுது பார்ப்பதற்கு வசதி இருக்கிறதோ அங்கே தான் பார்ப்பார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன் : குறைந்தபட்ச திட்டமாக அமைச்சர் கள் ஒரு மாதத்தில் ஒரு வாரமாவது தலைநகரில் இருந்து காரியங் களை கவனிக்கிற ஏற்பாட்டைச் செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தப் பொறுப்பைக் கூட அமைச்சர்களுக்குக் கொடுக்கவில்லையென்று சொன்னால் அமைச்சர் கள் என்று பதவி வகிப்பதில் பயன் இல்லை.

முசிரி போலீஸ் நிலைய சம்பவம்

* 516 **கேள்வி.—திரு. செ. மாதவன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், முசிரி நகரத்தில் உள்ள போலீஸ் நிலையத்தில் ஒருவரைப் போலீசார் அடித்ததால் மரணமடைந்தது உண்மையா?

(இ) ஆமெனில், அதன்மீது விசாரணை நடத்தப்பட்டதா ?

(உ) இதுபற்றி எடுத்த மேல் நடவடிக்கை என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) *to* (*c*) As the matter is sub-judice, the question cannot be answered at this stage.